முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண்.63/2023

நாள். 02.04.2026 வா.சா.2 – திரு.மரிய கிறிஸ்து ஆல்வின்

த/பெ - திரு.மரிய இருதய நாடார்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1) வழக்கு தாக்கல் செய்துள்ள எனது தகப்பானார் என்றால் சரிதான். வழக்கு சொத்து வடமேற்கு முனையில் பிரதிவாதியின் சொத்து உள்ளது என்றால் சரிதான். அதில் பிரதிவாதி வடக்கு நோக்கி வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். உங்கள் வீட்டையும், பிரதிவாதி வீட்டை பிரிப்பதற்கு ஒரு காம்பவுண்ட் சுவர் இருக்கிறது என்றால் முன்பு இருந்தது,தற்போது அது இடிக்கப்பட்டுவிட்டது. முன்பு சுவர் இருந்ததாக கூறுகிறீர்கள் அது கட்டப்படும்போது அது உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான், அது கட்டப்பட்டு 25 வருடங்கள் இருக்கும் என்றால் சரிதான். அந்த பழைய சுவர் ஆனது மண் கட்டுமானம் என்றால் சரியல்ல. மேற்படி பழைய சுவர் சேர்த்து பிரதிவாதியின் கழிவறை இருந்தது என்றால் சரிதான். தற்போது உங்கள் தகப்பனார் பழைய சுவரையும், கழிவறை அகற்றி தரவேண்டும் என்பதால் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் பிரதிவாதி ஆனவர் மேற்படி பழைய சுவரையும், கழிவறையும் இடித்து விட்டார்கள், தற்போது பராமரிப்பாக போடப்பட்டுள்ள இடத்தையும் சேர்த்து புதிதாக கழிவறை கட்டியுள்ளார்கள். உங்கள் தகப்பானர் தாக்கல் செய்துள்ள பிராதை படித்து பார்த்துள்ளீரா என்றால் படித்து பார்த்துள்ளேன். நீங்கள் பராமரிப்புக்கா இடம் ஒதுக்கியதாக சாட்சியம் கொடுத்துள்ளீர்கள், அந்த விவரம்

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.04.02 02:18:40 +0530

சம்மமந்தமாக உங்கள் தகப்பனார் பிராதில் சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. பராமரிப்புக்காக இடம் ஒதுக்கியதாக கூறுகிறீர்கள் அதற்கு ஆவணம் உள்ளதா என்றால் வீட் டு வரைபடம் உள்ளது. அதை தாக்கல் செய்துள்ளேன். அந்த வரைபடத்தை பார்த்தால் எவ்வளவு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது என்ற விவரம் தெரிய வரும் என்றால் சரிதான். நீங்கள் கூறியது போல் சுவரை பராமரிப்பதற்கு எந்த இடமும், ஒதுக்கப்படவில்லை சரியல்ல. நீதிமன்றத்திலிருந்து சொத்தை பார்வையிடுவதற்கு நீதிமன்ற ஆணையர் வந்தார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆவணம் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் அதை படித்து பார்த்துள்ளீரா என்றால் இல்லை.

2) உங்கள் முதல் விசாரணை வாக்குமூலத்தில் ஆணையர் வந்தார் அளவீடு செய்தார், சரியான அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். பிராதில் உங்கள் தகப்பனார் எத்தனை தபசில் சொத்துக்களை குறிப்பிட்டுள்ளார் என்றால் ஒரே சொத்து தான் சொல்லியுள்ளார். நீங்கள் சொல்லியுள்ள பழைய சுவரில் தான் 25 வருடங்களுக்கு முன்பே பிரதிவாதி கழிவறை கட்டியுள்ளார் என்றும் புதிதாக எந்த கழிவறையும் கட்டவில்லை என்றால் சரியல்ல. பழைய கழிவறை கட்டும்போதுதான் பிரதிவாதிக்கு உங்கள் தகப்பனார் ஒத்தாசை செய்துள்ளார் என்றால் சரியல்ல. உங்கள் வீட்டிற்கு தென்கிழக்கு பகுதியில் ஆக்கிரமிப்பு உள்ளதா என்றால் இல்லை.

3) நீதிமன்ற ஆணையர் சர்வேயருடன் அளவீடு செய்யும் போது சர்வே கல்லை கண்டுபிடிக்கமுடியவில்லை என்று சொன்னால் சரியல்ல. சர்வே கல்லை

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.04.02 02:18:45 +0530

கண்டுபிடிக்கமுடியாமல் தெருவில் இருந்துதான் அளவீடு செய்தார்கள் என்றால் சரியல்ல, எல்லை மால் கல்லில் இருந்து அளவீடு செய்ததாக சாட்சி கூறுகிறார். உங்கள் வீட்டிற்கு வடபுறம் யார் வீடு உள்ளது என்றால் பிரதிவாதி வீடு மற்றும் வருவேல் நாடார், அந்தோணி நாடார் ஆகியோர் வீடு உள்ளது. வருவேல் நாடார், அந்தோணி நாடார் ஆகியோர்களின் இடத்தை அளவீடு செய்யவில்லை என்றால் சரியல்ல, அவர்களுடைய எல்லா இடத்தையும் தான் அளவீடு செய்தார்கள்என்று சாட்சி கூறுகிறார். பிரதிவாதியை நீங்கள் அடித்ததாகவும், ஆபாசமாக பேசியதாகவும் கொலைமிரட்டல் செய்ததாகவும் உங்கள்மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கை பற்றி உங்கள் முதல்விசாரணை பொய் வழக்கு என்று கூறுவுள்ளீர்கள் என்றால் சரிதான். அந்த வழக்கை இரத்து செய்ய கேட்டு எந்தவித மனுவையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

4) பிரதிவாதிகள் அருவடைய இடத்தில் தான் கட்டுமானம் கட்டியுள்ளார் என்றும், நீங்கள் தான் அவருடைய சொத்து அபகரிக்க வேண்டும் என்று பொய்யான சங்கதிகள் உடன் வழக்கு தாக்கல் செய்துள்ளீர் என்றால் சரியல்ல. உங்களுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் நீங்கள் சாட்சியாக இருக்கும்பட்சத்தில் பரிகாரம் கேட்டு சாட்சி வாக்குமூலம் தாக்கல் செய்யமுடியாது என்றால் சரியல்ல. உங்கள் சாட்சி ஏற்றுக் கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல.

வா.சா.2 குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.04.02 02:18:50 +0530